# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 3 மார்ச் 2019 ₹1.00

## பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கு– 2019




கால்நடை அறிவியல் தமிழ் இயக்கமும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் இணைந்து “உழவர் வாழ்வியலில் கால்நடை மருத்துவ அறிவியல்” எனும் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கின் தொடக்க விழா 22.02.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் அண்ணா கலையரங்கில் நடைபெற்றது. கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். அவர் தமது உரையில் கால்நடை மருத்துவ அறிவியலின் அனைத்து ஆராய்ச்சி முடிவுகளும் கள அளவில் பயன்படுத்துவதற்கு ஏதுவாகத் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும் எனக் கூறினார். கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் கருத்தரங்க மலர் வெளியிட்டு ஆற்றிய உரையில் பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். படிப்புக்கான முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுப் பாடத் திட்டங்கள் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு விட்டன என்றும், ஏனைய ஆண்டிற்கான பாடத்திட்டங்கள் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தமிழில் மொழியாக்கம் செய்யப்படும் என்றும் கூறினார். கருத்தரங்கிற்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அரசின் கால்நடை மருத்துவப் பணிகள் கூடுதல் இயக்குநர் மருத்துவர் கா. முகம்மது உதுமான், இந்திய ஜப்பான் வணிகச் சேவை மையத் தலைவர் திரு. ஜீன்இச்சி ஹஜ்க்காவோ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் முனைவர் ச. சண்முகசுந்தரம், முனைவர் ந.பலராமன், முனைவர் இரா. பிரபாகரன் மற்றும் கேரள அரசின் முன்னாள் முதன்மைச் செயலர் ச. சுப்பையா இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை அறிவியல் தமிழ் இயக்கத்தின் தலைவர் முனைவர் த. ரவிமுருகன் வரவேற்புரை ஆற்றினார். பெங்களூரு பால்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ச.ஜெயக்குமார் நன்றியுரை ஆற்றினார். முன்னதாகக் கால்நடை அறிவியல் தமிழ் இயக்கத்தின் பொதுச்செயலாளர் முனைவர் ந. குமாரவேலு, கால்நடை அறிவியல் தமிழ் இயக்கத்தின் குறிக்கோள்கள் பற்றிக் கூறினார். கருத்தரங்கில் 467 கால்நடை அறிவியலாளர்கள் பங்கேற்று 168 ஆராய்ச்சிக் கட்டுரைகள் அளித்தனர்.

23.02.2019 அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மருத்துவர் சுதாசேஷையன் அவர்கள் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, நிறைவு உரை ஆற்றினார். விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசின் நிதித்துறை சிறப்புச் செயலர் மருத்துவர் ஆர்.ஆனந்தகுமார், இ.ப.ஆ., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெ. ஜான் கிருபாகரன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புதிய விலங்கினச் சோதனைக்கூடம் – திறப்பு விழா



மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிர்த் தொழில்நுட்பத் துறைக் கூடுதல் செயலர் மற்றும் நிதி ஆலோசகர் திரு. பி. ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் மாதவரம் பால்பண்ணை, கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் புதியதாக நிறுவப்பட்ட விலங்கின ஆய்வுக்கூடத்தை 14.02.2019 அன்று திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் முதுநிலை ஆலோசகர் முனைவர் எஸ். ஆர். ராவ், மைசூரில் உள்ள மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தின் இராணுவ உணவு ஆராய்ச்சி ஆய்வக முன்னாள் இயக்குநர் முனைவர் ஹெச்.வி. பாத்ரா, ஐதராபாத்தில் உள்ள தேசிய விலங்கின உயிர்த் தொழில்நுட்ப நிலைய இயக்குநர் முனைவர் சுபீர் எஸ். மஜும்தார், பெங்களூரில் உள்ள காலஸ்ஜென் தனியார் நிறுவனத் தலைமைச் செயல் அலுவலர் முனைவர் சோமு குமார் அம்பாட், பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத் திட்ட இயக்குநர்(பொ.) முனைவர் மு. ராமன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்த் தகவலியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கா.குமணன் ஆகியோர் பங்கேற்றனர். மாடுகளின் மடிவீக்க நோய் தணிப்பான், நானோ–மூலிகை மெத்திகான் களிம்பு, நானோ–சார்காய்டு களிம்பு, கோழியின இரத்தக் கழிச்சல் நோயைத் தணிக்க –அலுமினியம் மெக்னீசியம் சல்பேட் குருணைகள் மற்றும் அலுமினியம் மெக்னீசியம் சல்பேட்டுடன் பச்சைத் தேயிலை சேர்க்கப்பட்ட குருணைகள், கோழியினங்களுக்கான குடல்நல நுண்ணுயிரிகள் கலந்த குருணைகள் – புரோபீட்ஸ், இவான் சின்ரோம் கண்டறிய நிறமேற்றும் கலன் ஆகிய ஏழு தொழில்நுட்பங்கள் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் உருவாக்கப்பட்டன. மேலும், இணையம்மூலம் கால்நடை மருத்துவத் தொழில்நுட்பங்களை வாங்கவும், பயன்பாட்டாளர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கவும் புதியதாக உருவாக்கப்பட்ட கைபேசி செயலி வெளியிடப்பட்டது.

## அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

காட்டுப்பாக்கம், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் 21ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் 08.02.2019 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (மண்டலம் 10) வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத், பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர்(பொ.) முனைவர் த.இராமசாமி, முனைவர் நி.கு. சுதீப் குமார், பேராசிரியர் மற்றும் தலைவர், பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பிரிவு, வேளாண்மை அறிவியல் நிலையத் தொடர்புத் துறை அதிகாரிகள், முன்னோடி விவசாயிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். வேளாண்மை அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர்




முனைவர் க. வேல்முருகன், 20ஆவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டப் பரிந்துரைகளின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் அனைத்துத் தொழில்நுட்ப வல்லுநர்களும் தம் பணிவிவர அறிக்கைகளை அளித்தனர்.

## தேசியப் பயிலரங்கு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்க்குறியியல் துறையில் "நுண்திசுப் பிணி ஆய்வு மற்றும் நோய்த் தடுப்பு திசுவேதியியல் பரிசோதனைகளில் மேம்படுத்திய முறைகள்" பற்றிய தேசியப் பயிலரங்கு, 04.02.2019 முதல் 08.02.2019 வரை நடைபெற்றது. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்து உரையாற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் பயிலரங்கக் கையேடு வெளியிட்டார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் "புற்றுநோய் கண்டறிதலில் நுண்திசுப் பிணி ஆய்வு மற்றும் நோய்த் தடுப்பு திசுவேதியியல் பரிசோதனைகளில் ஆய்வுக் கண்ணோட்டம்" பற்றிச் சிறப்பு விரிவுரைகளை வழங்கினார். பயிலரங்கின் நிறைவு விழாவில் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ.தினகர் ராஜ் அவர்கள் உரையாற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்வேறு மாநிலங்களில் இருந்து மொத்தம் 22 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு விருது

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 01.02.2019 மற்றும் 02.02.2019ஆம் தேதிகளில் கல்கத்தா, மேற்கு வங்கக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 19ஆவது கால்நடை மருத்துவ மாநாடு, மேம்பட்ட கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்தியக் கூட்டமைப்பின் 26ஆவது ஆண்டுக் கருத்தரங்கு மற்றும் "ஒற்றை நல தொலைநோக்குப் பார்வையின் கீழ் விலங்கு நலம் மற்றும் உற்பத்தியில் புதுமைசார் வளர்ச்சி மூலம் பாதுகாப்பான உணவு" தேசியக் கலந்தாய்வரங்கில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, அறிவியல் அமர்வுக்குத் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர் அவர்களுக்கு மேம்பட்ட கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்கான இந்தியக் கூட்டமைப்பின் "மேஜர் (திருமதி) மல்லிகா திரிவேதி விருது 2019" அளித்துச் சிறப்பிக்கப்பட்டது.

## பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

- சென்னை, தேசிய சித்த மருத்துவ நிறுவனம் 11.02.2019 முதல் 15.02.2019 வரை நடத்திய "ஆய்வக விலங்கு நலம் மற்றும் அடிப்படை ஆராய்ச்சி நுட்பங்கள்" எனும் பயிலரங்கில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் பங்கேற்று, 15.02.2019அன்று "நச்சியல் ரீதியான எலிப் பிரேதப் பரிசோதனையில் திசு மாதிரி சேகரிப்பு" எனும் தலைப்பில் சிறப்பு விரிவுரை ஆற்றினார்.




- பஞ்சாப், அமிர்தசரஸ், கல்சா கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி மற்றும் உத்திர பிரதேசம், லக்னோ, இந்திய நாயின மருத்துவ மேம்பாட்டுச் சங்கம் மூலம் 26.02.2019அன்று நடைபெற்ற இந்திய நாயின மருத்துவ மேம்பாட்டுச் சங்கத்தின் 16ஆவது ஆண்டுக் கருத்தரங்கு மற்றும் "நாயின மருத்துவம் மற்றும் நலத்தில் புதிய முறைகளை உருவாக்குதல்" எனும் தேசியக் கலந்தாய்வரங்கில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மைய விரிவுரை அமர்வுக்குத் தலைமை தாங்கினார்.

- பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள், சென்னையில் உள்ள பேராசிரியர் தனபாலன் கலை அறிவியல் கல்லூரி 28.02.2019 அன்று ஏற்பாடு செய்த "உணவு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத்திற்குப் பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு தொடர்பான புதிய முறைகள்" குறித்த தேசியக் கருத்தரங்கின் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றுக் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார்.

### ஆளுமைத்திறன் வளர்த்தல் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் சேலம் அண்ணா மேலாண்மை நிறுவனமும் இணைந்து கல்லூரிப் பணியாளர்களுக்கு "ஆளுமைத்திறன் வளர்த்தல்" பயிற்சியை 07.02.2019 மற்றும் 08.02.2019ஆம் தேதிகளில் நடத்தின. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் முனைவர் பி. தாமோதரன், சேலத்தைச் சார்ந்த பயிற்றுநர் திரு. ஏ. ஞானசேகரன், கோயம்புத்தூர் விமானப்படைப் பள்ளியின் உளவியல் ஆலோசகர் திருமதி ஆர். ஹேமாம்பிகா ஆகியோர் பயிற்சியில் பங்கேற்று, தனிநபர் தகவல்தொடர்புத் திறன், நேர மேலாண்மை, குழுவாகச் செயல்படுதல், மன அழுத்த மேலாண்மை ஆகியவை குறித்துப் பயிற்சி அளித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். மேலும், 08.02.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் சான்றிதழ்கள் வழங்கினார். பயிற்சியில் மொத்தம் 88 பணியாளர்கள் பங்கேற்றனர்.

### பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நுண்ணுயிரியல் துறையில் "கோழி நோய்களின் மூலக்கூறு கண்டறிதல்" பற்றிய பயிற்சி, கெமின் இந்தியா நிறுவன உதவியுடன் 25.02.2019 முதல் 01.03.2019 வரை அளிக்கப்பட்டது. பயிற்சியைக் கல்லூரி முதல்வர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியின் நிறைவு விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் தலைமை வகித்து, சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில்




இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த 22 கால்நடை மருத்துவர்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டாளர்கள் பங்கேற்றனர்.

- மேலே குறிப்பிட்ட கல்லூரியின் கோழியின உயர்கல்வி மையத்தில் "கோழிப் பண்ணைகளில் ஏற்படும் நோய்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மேலாண்மைச் சவால்களைச் சமாளிக்கும் உத்திகள்" எனும் 21 நாள் தேசியப் பயிற்சி, 06.02.2019 முதல் 26.02.2019 வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிற்சி நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் மாநிலக் கால்நடை மருத்துவப்

பல்கலைக்கழகங்களின் 24 அறிவியலாளர்கள் / உதவிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல்




துறையில் தமிழக அரசின் புதுமைத் திட்டத்தின்கீழ்ப் பல்கலைக்கழக விரிவாக்க மையங்களில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு “மரபுசார் கால்நடை மருத்துவப்” பயிற்சி 25.02.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் கால்நடைகளுக்கான மரபுசார் மூலிகைகளின் பயன்பாடு பற்றிச் செயல்முறை விளக்கம் அளித்தார். இதில் 23 பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

- பல்கலைக்கழகத்தின் விலங்குவழிப் பரவும் நோய்கள் ஆய்வகம்மூலம் “பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பெருகிவரும் கால்நடை நோய்களை(ஆந்த்ராக்ஸ்) கண்டறிந்து கட்டுப்படுத்தல்” எனும் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையின் அஸ்காடு (2016–2017) திட்டத்தின்கீழ் “களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்குத் தமிழ்நாட்டில் ஆந்த்ராக்ஸ் நோயை ஆய்வகம்வழிக் கண்டறிந்து கட்டுப்படுத்தல்” எனும் பயிற்சி, 11.02.2019அன்று நடத்தப்பட்டது. பயிற்சியில் 15 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

- பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் மாநிலத் தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை சார்ந்த 200 கால்நடை



ஆய்வாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அளிக்கப்பட்டது. பயிற்சியானது இரு கல்லூரிகளிலும் நான்கு தொகுதிகளாக ஒரு தொகுதிக்கு 25 பேர் என, 25.01.2019–02.02.2019 (முதல் தொகுதி), 04.02.2019–11.02.2019 (இரண்டாம் தொகுதி), 15.02.2019–22.02.2019 (மூன்றாம் தொகுதி), 25.02.2019–04.03.2019 (நான்காம் தொகுதி) ஆகிய தேதிகளில் அளிக்கப்பட்டது.

### பண்ணையாளர் கருத்தரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறையில் “நவீன உத்திகளைப் பயன்படுத்திப் பண்ணைக் கால்நடைகளில் ஒட்டுண்ணி நோய்களைக் கட்டுப்படுத்துதல்” பற்றிய மாநில அளவிலான பண்ணையாளர் கருத்தரங்கு 19.02.2019 மற்றும் 20.02.2019ஆம் தேதிகளில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் மா.ரா. புருசோத்தமன் அவர்கள் கருத்தரங்க மலர் வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். நாமக்கல், கால்நடைப் பராமரிப்பின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் வி.பி. பொன்னுவேல் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 70 பண்ணையாளர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

### பண்ணையாளர் பயிற்சி

காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையமும் சென்னை, தென்னை மேம்பாட்டு வாரியமும் இணைந்து “தென்னை மரத்தின் நண்பர்கள்” எனும் பயிற்சியை 03.02.2019முதல் 08.02.3019 வரை நடத்தின. தென்னை மரம் ஏறுதல் போட்டி 07.02.2019அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள், பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழும் போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசும் 08.02.2019அன்று வழங்கினார். பயிற்சியில் மொத்தம் 20 பேர் பங்கேற்றனர்.

### நபார்டு வங்கி நிதியுதவிப் பயிற்சி

- கடலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 30 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 13.02.2019 முதல் 15.02.2019 வரை அளிக்கப்பட்டது. நபார்டு வங்கியின் மாவட்ட மேலாளர் திரு. ஹரிஹரபுத்திரன், இந்தியன் வங்கியின் முதுநிலை மேலாளர் திரு. ஜெகநாதன் ஆகியோர் நபார்டு வங்கி அளிக்கும் நிதியுதவித் திட்டங்கள் மற்றும் வங்கிக் கடனுதவி பெறுவதற்கான வழிமுறைகள் பற்றிப் பண்ணையாளர்களுக்கு எடுத்துரைத்தனர். பயிற்சி நிறைவு விழாவில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் முருகேசன் அவர்கள் கால்நடைத் துறையின் திட்டங்கள் குறித்து விவரித்து, பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- விழுப்புரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் நபார்டு வங்கி நிதியுதவியில் “ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்” எனும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி 14.02.2019 முதல் 16.02.2019 வரை நடத்தப்பட்டது. விழுப்புரம், கால்நடைப் பராமரிப்பின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் ரா. மனோகரன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். விழுப்புரம், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. வி. ரவிசங்கர், பொன்னேரி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நீர்ச்சூழல் மேலாண்மைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி. மணிகண்டவேலு

ஆகியோர் பயிற்சியில் பங்கேற்று, பயிற்சியாளர்களுடன் கலந்துரையாடினர்.

✦ கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நபார்டு வங்கி நிதியுதவியில் 'வணிகரீதியில் கறவை மாடு வளர்ப்பு' குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சியை 25.02.2019 முதல்



27.02.2019 வரை நடத்தியது. கோயம்புத்தூர், நபார்டு வங்கித் துணை மேலாளர் திரு. எஸ்.எஸ். வசீகரன் அவர்கள் 25.02.2019அன்று பயிற்சியைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். சரவணம்பட்டி, கால்நடை மருந்தகத்தின் கால்நடை உதவி மருத்துவர் மூ. இராஜாங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிற்சியில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் நபார்டு உழவர் மன்றங்களைச் சார்ந்த 25 விவசாயிகள் பங்கேற்றனர்.

### ஆத்மா நிதியுதவிப் பயிற்சி

★ நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறைமூலம் ஆத்மா திட்ட நிதியுதவியில் "கால்நடைத் தீவனம் தயாரித்தல்" பயிற்சி 21.02.2019 முதல் 23.02.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில் 40 பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

★ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் ஆத்மா திட்டமும் இணைந்து "ஆடு வளர்ப்பும் பராமரிப்பும்" பற்றிய கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சியை 04.02.2019முதல் 09.02.2019வரை நடத்தின. 09.02.2019அன்று நடைபெற்ற



பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் தலைமை வகித்துச் சான்றிதழ் வழங்கினார். திருநெல்வேலி, வேளாண்மைத் துறையின் ஆத்மா திட்ட இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்(பொ.) திரு. வி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் திரு. ஆர். கஜேந்திரபாண்டியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த 29 தொழில்முனைவோர் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

★ கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆத்மா திட்ட நிதியுதவியில் க.பரமத்தி கிராமத்தில் 25 விவசாயிகள் பயன்பெறும் வகையில் "வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு" குறித்த பண்ணைப் பள்ளியை நடத்தியது. பண்ணைப் பள்ளியைக் கரூர், வேளாண் இணை இயக்குநர் மற்றும் ஆத்மா திட்ட இயக்குநர் திருமதி கே.பி. ஜெயந்தி அவர்கள் 10.01.2019அன்று துவக்கிவைத்தார். கரூர், உழவர் பயிற்சி மையத் துணை இயக்குநர் திருமதி உமாராணி அவர்கள் முன்னிலை வகித்தார். 28.02.2019அன்று நடைபெற்ற பண்ணைப்பள்ளியின் நிறைவுவிழாவில் க.பரமத்தி வேளாண்




உதவி இயக்குநர் திரு. ஏ. காளிமுத்து பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். இம் மையம்மூலம் கரூர், ஆத்மா திட்ட நிதியுதவியில் "கால்நடைகளுக்கு மரபுசார் மூலிகை மருத்துவப்" பயிற்சி, 40 விவசாயிகளுக்கு 05.02.2019 முதல் 07.02.2019 வரை நடத்தப்பட்டது. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மரபுசார் மூலிகை ஆராய்ச்சி மையம், நாமக்கல் மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை, தஞ்சாவூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகிய இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. 07.02.2019அன்று பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

★ ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் ஆத்மா திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தின் 40 விவசாயிகளுக்கு மரபுசார் கால்நடை மருத்துவம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

### மருந்து உற்பத்தியாளர் சந்திப்பு – 2019

✪ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்களுக்காக மூன்றாவது மருந்து உற்பத்தியாளர்



சந்திப்பு 20.02.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் வே.ரமேஷ்சரவணகுமார் அவர்கள் மருந்தியல் வினாடிவினாப் போட்டி 2018-19இல் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். இச் சந்திப்பில் மொத்தம் 23 மருந்து உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு தத்தம் பொருள்களைக் காட்சிக்கு வைத்தனர்.

✪ நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்காக மருந்து உற்பத்தியாளர் சந்திப்பு 15.02.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் மருந்தியல் வினாடிவினாப் போட்டி 2018-19இல் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார். இச் சந்திப்பில் மொத்தம் 28 மருந்து உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு தத்தம் பொருள்களைக் காட்சிப்படுத்தினர்.

## வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

★ சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைமூலம் "இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம்" 20.02.2019அன்று ஒருங்கிணைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார்.



பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் ஜி.சரத்சந்திரா அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். மொத்தம் 280 நாய்கள் மற்றும் 18 பூனைகளுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது

★ மாதவரம் பால்பண்ணை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனையில் 27.02.2019



அன்று "இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம்" நடத்தப்பட்டது. பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் முன்னிலையில் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 291 நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

## கலந்துரையாடல் கூட்டம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களுக்குக் காப்புரிமை பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் 18.02.2019அன்று நடைபெற்றது. கூட்டத்தில் புதுதில்லி, இயற்கை வளஆதாரப் பாதுகாப்பு அமைப்பின் வணிக மேம்பாட்டுத் தலைவர் திரு.ந.க.லஷ்மிநாராயணன் அவர்கள் பங்கேற்றார். நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கிவைத்தார். கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

- குஜராத், ஆனந்தில் உள்ள தேசியப் பால்வள வளர்ச்சி ஆணைய ஆலோசகர் முனைவர் கே.ஆர். திரிவேதி, மேலாளர் முனைவர் நிலேஷ் நயி, துணை மேலாளர் முனைவர் அஷரப் ஹுசைன் ஆகியோர் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பல்வேறு பிரிவுகளை 26.02.2019அன்று பார்வையிட்டு, கல்லூரியின் இளநிலைப் பட்ட இறுதியாண்டு மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர். மேலும், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் காணொலிக் காட்சிமூலம் கலந்துரையாடினர். 27.02.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கும் வருகைதந்து, பேராசிரியர்கள் மற்றும் முதுநிலைப்பட்ட மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்த்தினர்.

## சிறப்பு விரிவுரை

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 11.02.2019அன்று நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் கோ. தினகர் ராஜ் அவர்கள் பங்கேற்று, "கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் உள்ள வேலைவாய்ப்புகள்" குறித்துச் சிறப்புரை ஆற்றி, இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார். மேலும், கல்லூரிப் பணியாளர் மன்றம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் "பயன்பாடுசார் பரிமாற்றத்தள ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவு மேம்பாடு – நாணயத்தின் இரு பக்கங்கள்" எனும் தலைப்பில் விரிவுரை வழங்கினார்.

## விருது

திருப்பதியில் 28.01.2019 முதல் 30.01.2019 வரை நடைபெற்ற 28ஆவது தேசியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மாநாட்டில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறைப் பேராசிரியர் முனைவர் சி. சௌந்தரராசனுக்கு மாநாட்டுச் சிறப்பு விருதும், பேராசிரியர்

முனைவர் நா. ஜெயதிலகனுக்குத் திருமதி நிசாமணி பாரிஜா நினைவு விருதும், முதுநிலைப் பட்ட மாணவர் எஸ். கௌரி சங்கருக்கு இளம் அறிவியலாளர் விருதும் அளித்துச் சிறப்பிக்கப்பட்டன.

### முத்தமிழ் விழா மற்றும் விளையாட்டு நாள் விழா

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 27.02.2019அன்று முத்தமிழ் விழா நடைபெற்றது. விழாவில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற தமிழ்நாட்டுப் பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் துணை இயக்குநர் முனைவர் தே. சங்கர சரவணன் அவர்கள் இளந்தென்றல் இதழை வெளியிட்டு, போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மேலும், விழாவில் தஞ்சாவூர் கரந்தை கலை அறிவியல் கல்லூரியின் ஒய்வுபெற்ற முதல்வர் முனைவர் இரா. குருநாதன் அவர்களும் பங்கேற்றார். 28.02.2019அன்று நடைபெற்ற விளையாட்டு நாள் விழாவில் தடகளப் பயிற்சியாளர் மற்றும் தென்னக ரயில்வேயின் திருச்சிக் கோட்டத் தலைமை முன்பதிவு மேற்பார்வையாளர் திரு. என். அன்னாவி அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று, நிகழ்ச்சியைத் துவக்கிவைத்துப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். இவ்விரு விழாக்களில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

### கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழா




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 01.03.2019அன்று கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று, விழாவிற்குத் தலைமை வகித்து மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி உரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை அளித்தார். மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் ஜி. பொன்னுதுரை வரவேற்புரை ஆற்றினார். விடுதிக் காப்பாளர் முனைவர் கே.எம். பழனிவேல் விடுதி ஆண்டறிக்கை அளித்தார்.

### வேளாண் அறிவியல் கண்காட்சியில் பல்கலைக்கழகம் பங்கேற்பு

புதுதில்லி, புசா வளாகத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் 20.02.2019 முதல் 23.02.2019 வரை நடைபெற்ற 14ஆவது வேளாண் அறிவியல் மாநாட்டின் இந்தியக் கண்காட்சி 2019இல் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம் பங்கேற்று, பரிமாற்றத்தளத்தில் உருவாக்கப்பட்ட கால்நடை மருத்துவப் பொருள்கள் மற்றும் அளிக்கப்படும் சேவைகளைக் காட்சிக்கு வைத்தது.

### அனைத்திந்திய வேளாண் பல்கலைக்கழகக் கலை நிகழ்ச்சியில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்பு



குஜராத், சர்தார்க்ருஷி நகரில் உள்ள சர்தார்க்ருஷி நகர் தண்டிவடா வேளாண் பல்கலைக்கழகத்தில் 03.02.2019 முதல் 07.02.2019 வரை நடைபெற்ற 19ஆவது அனைத்திந்திய வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கலைநிகழ்ச்சியின் பல்வேறு போட்டிகளில் பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்லூரிகளையும் சார்ந்த 25 மாணவர்கள் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இளநிலைப் பட்டப்படிப்பு மூன்றாம் ஆண்டு மாணவி ஆதிரா ஆனந்த் குடியுள் தனிநபர் நடிப்பில் மூன்றாம் பரிசு வென்றார். கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பாராட்டினார்.

### புத்தகக் காட்சி – 2019

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் கருதி, 12.02.2019அன்று புத்தகக் காட்சி கல்லூரிக் கலையரங்கில் நடத்தப்பட்டது. புத்தகக் காட்சியைக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் துவக்கிவைத்தார்.

### மாணவர் பயிற்சி

- பல்கலைக்கழகக் கல்வி நிலைய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட நிதியுதவியில் "தகவல் தொடர்பு மற்றும் மென்திறன்கள்" பற்றிய இரு நாள் பயிற்சி, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் இளநிலைப் பட்ட மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. பயிற்சியானது ஐந்து தொகுதியாகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இளநிலைப் பட்ட இரண்டாம் ஆண்டு (19.02.2019 – 22.02.2019), மூன்றாம் ஆண்டு (26.02.2019 – 01.03.2019) மற்றும் இறுதியாண்டு (07.02.2019 – 08.02.2019) மாணவர்களுக்கும், கோடுவெளி பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களுக்கும் நடத்தப்பட்டது.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறையும் மாணவர் தொழில்முனைதல் திறன் மேம்பாட்டு ஒருங்கிணைப்பு மையமும் இணைந்து இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக மேம்பாட்டு நிதியுதவியில் "வெற்றிகரமான எதிர்காலத்திற்குச் சிறந்த மனப்பான்மையும் தன்னம்பிக்கையும் வளர்த்துக்கொள்ளல்" குறித்த பயிற்சியை, முதலாம் ஆண்டு இளநிலை கால்நடை மருத்துவப் பட்ட மாணவர்களுக்காக 02.02.2019 அன்று நடத்தின. பயிற்சியைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா.டென்சிங் ஞானராஜ் அவர்கள்

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG(CCR)/WPP-708/2018-2020
REGISTERED No.TN/CC(S)DN/569/18-20

Posted on 28.03.2019 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

துவக்கிவைத்தார். ரிப் ஆலோசனை மையப் பொது மேலாளர் திரு. ஜெ. கிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிற்சியில் 108 மாணவர்கள் பங்கேற்றனர். இதே போன்று 16.02.2019அன்று நடத்தப்பட்ட பயிற்சியில் இறுதி ஆண்டு இளநிலை கால்நடை மருத்துவப் பட்ட மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள் உள்பட மொத்தம் 76 மாணவர்கள் பங்கேற்றனர்.

### ராகிங் தொடர்பான ஆய்வுக்கூட்டம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 26.02.2019அன்று 2018–2019ஆம் கல்வியாண்டிற்கான ராகிங் தடுப்புக்குழுவின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் ராகிங் தடுப்புக்குழுத் தலைவர் மற்றும் பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் பெ. குமாரசாமி அவர்கள் கூட்டத்தில் பங்கேற்று, கல்லூரி மற்றும் விடுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ராகிங் தடுப்புப் பணிகளை ஆய்வுசெய்தார். கல்லூரி ராகிங் தடுப்புக்குழு உறுப்பினர்கள், அனைத்து வகுப்பு மற்றும் விடுதி மாணவ பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆய்வுக் கூட்டத்தினைக் கல்லூரியின் கல்விப் பிரிவுத் தலைவர் முனைவர் சௌ. ஈஸ்வரி அவர்கள் ஒருங்கிணைத்து, ராகிங்கைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கினார்.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- ❖ உழவர் தினத்தை முன்னிட்டுத் திருவள்ளூர் மாவட்டம், கல்யாண்குப்பத்தில் 10.02.2019அன்று நடத்தப்பட்ட கால்நடைகளில் மலட்டுத்தன்மை நீக்க முகாமில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 43 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் பங்கேற்றனர். சிவன்வயல் கிராமத்தில் கன்றுகள் அணிவகுப்பும், பண்ணை மகளிர் நலன் கருதி "இந்திய விவசாயிகள்" குறித்த கோலப் போட்டியும் நடத்தப்பட்டன. விவசாயிகள் மற்றும் சிறுவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.
- ❖ சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் மார் கிரிகோரியஸ் கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து கால்நடை மருத்துவ முகாம், திருவள்ளூர் மாவட்டம் மஞ்சன்காரணை கிராமத்தில் 17.02.2019அன்று நடத்தப்பட்டது. முகாமில் மொத்தம் 71 மாடுகள் மற்றும் 30 கோழிகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது.
- ❖ தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டுச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 56 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் 02.02.2019அன்று சென்னை, விவேகானந்தர் இல்லத்தைப் பார்வையிட்டனர்.
- ❖ கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு மூலம் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுடன் இணைந்து கோடுவெளி கிராமத்தில் கால்நடை நல முகாம் 02.02.2019 அன்று நடத்தப்பட்டது. முகாமில் 50 மாடுகள் மற்றும் 60 ஆடுகளுக்குச் குடற்புழு நீக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**பதிப்புக் குழு**

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா